ISBN:978-81-687049-5-4

108

செந்தமிழறிஞர்கள்

சிற்பி
பாலசுப்பிரமணியம்






பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in

https://www.annacentenarylibrary.org/pages/view/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF-%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B2%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%AE%E0%AF%8D-1936

செந்தமிழ்சிற்பிகள்

சிற்பி-பாலசுப்பிரமணியம்-1936



அறிமுகம்

விரிவுரையாளராகத் தம் பணியைத் தொடங்கிய பாலசுப்பிரமணியம், பாரதியார் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக இருந்து ஓய்வு பெற்றார். கவிதை மீது இருந்த பிரியத்தால் சிற்பி என்ற புனைபெயரை வைத்துக்கொண்டார். இரு முறை சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றவர். வானம்பாடி கவிதை இயக்கத்தின் பங்களிப்பாளர்களில் ஒருவர்.

இதழ்கள்

வானம்பாடி

அன்னம் விடு தூது

வள்ளுவம்

கவிக்கோ

கணையாழி

படைப்பு

நிலவுப் பூ

சிரித்த முத்துக்கள்

மௌன மயக்கங்கள்

ஒரு கிராமத்து நதி

நீலக்குருவி

கவிதை வானம்

அக்கினி சாட்சி

(😊)(😊)(😊) ಅಅಅಅಅಅಅಅ (😊)(😊)(😊)

விருதுகள்

- மௌன மயக்கங்கள் - கவிதை நூல் - தமிழக அரசு விருது (1982)
- பாவேந்தர் விருது - தமிழக அரசு (1991)
- உ. சுப்பிரமணியனார் ஆங்கில நூல் பரிசு - தமிழ்ப் பல்கலைக்கழகம் (1994)
- திருப்பூர் தமிழ்ச் சங்க விருது - சிற்பியின் கவிதை வானம் நூலுக்கு - (1997)
- கம்பன் கலைமணி விருது - கம்பன் அறநிலை, கோவை (1998)
- மூத்த எழுத்தாளருக்கான லில்லி தேவசிகாமணி விருது (1998)
- பாரதி இலக்கிய மாமணி விருது - அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் மன்றம், சென்னை (1998)

- 'பூஜ்யங்களின் சங்கிலி' - தமிழ்நாடு அரசு பரிசு (1998)
- ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பிறந்த நாள் பரிசு -மதுரைத் தமிழிசைச் சங்கம் (2000)
- சாகித்ய அகாதமி மொழிபெயர்ப்பு விருது - 2000 (அக்கினி சாட்சி நாவலுக்கு - 2001)
- சாகித்ய அகாதமி படைப்பிலக்கிய விருது 2002 - (ஒருகிராமத்து நதி கவிதை நூலுக்கு - (2003)
- மகாகவி உள்ளூர் விருது - திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் (2003)
- பாரதி பாவாணர் விருது - மகாகவி பாரதி அறக்கட்டளை கோயம்புத்தூர் (2004))
- ராஜா சர் முத்தையா விருது (2009)
- கவிக்கோ அப்துல்ரகுமான் விருது (2006)
- 'நல்லி' திசை எட்டும் மொழியாக்க விருது (2010)
- கம்பன் கழகம் சென்னை எம்.எம்.இஸ்மாயில் விருது (2010)
- பப்பாசி கலைஞர் பொற்கிழி விருது (2012)
- பத்மஸ்ரீ விருது (2022)

"சிற்பி"
பொ. பாலசுப்பிரமணியம்



பிறப்பு	29 சூலை 1936 (அகவை 89) ஆத்துப்பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம், மதராசு

	மாகாணம், பிரித்தானிய இந்தியா (தற்போது தமிழ்நாடு, இந்தியா)
கல்வி	முனைவர் (சென்னைப் பல்கலைக்கழகம், 1987) முதுகலை, தமிழ் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1956) இடைநிலை (திருச்சி ஜமால் முகமது கல்லூரி, 1953) பள்ளி (தத்தமங்கலம் சீலி நினைவு உயர்நிலைப்பள்ளி, பாலக்காடு, 1951)
பணி	கவிஞர், பேராசிரியர், எழுத்தாளர், இதழாளர், பல்வேறு திட்டங்களுக்குப் பொறுப்பாளர், சாகித்திய அகாதெமி ஒருங்கிணைப்பாளர்
பெற்றோர்	கி. பொன்னுசாமி, கண்டியம்மாள்

கவிஞர் சிற்பியைக் குறித்து வெளிவந்துள்ள படைப்புகள்..

- சிற்பியின் படைப்புக்கலை - முனைவர் தே.ஞானசேகரன் (ப.ஆ.) (1993)
- கோபுரத்தில் ஒரு குயில் - சி.ஆர்.ரவீந்திரன் (1996)
- சிற்பி - மரபும் புதுமையும் - முனைவர் தே.ஞானசேகரன்(ப.ஆ.) (1996)
- கவிஞர் சிற்பி -கருத்தியல்வளம் - முனைவர் இரா.சந்திரசேகரன் (ப.ஆ.) (2003)
- கவிஞர் சிற்பி - கவிதைவளம் - முனைவர் இரா.சந்திரசேகரன் (ப.ஆ.) (2003)
- கவிஞர் சிற்பி - கவிதைக்குள் ஒரு பிரபஞ்சம் - முனைவர் இரா.சந்திரசேகரன் (2004)

- சிற்பியின் படைப்புலகம் - பேராசிரியர்கள் மா.நடராசன், மதியழகன் (ப.ஆ.) (2004)
- சிற்பியின் கவிதையில் சிறைப்பட்ட சீர்திருத்தக் கவிஞர் - அ.சங்கரவள்ளி நாயகம் (2006)
- சிற்பி துளிகளில் ஒளிரும் வெளிகள் - சொ.சேதுபதி (2011)
- சிற்பி - மௌனம் உடையும் ஒரு மகாகவிதை - நவபாரதி (2011)
- ஆழிக்கவிதைகளும், ஆழியாற்றுக்கவிதைகளும் - உ.அலிபாவா (ப.ஆ) (2012)
- Sirpi Poet as Sculptor - P.Marudanayagam (2006)
- A noon in Summer (1996)
- Sirpi Poems - A Journey (2009)

மதிப்புறு பொறுப்புகள்

- காந்திகிராம் பல்கலைக்கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், துணைவேந்தர் தேர்வுக்குழு உறுப்பினர்.
- சாகித்ய அகாதமி செயற்குழு உறுப்பினர் / ஒருங்கிணைப்பாளர் தமிழ் ஆலோசனைக் குழு (2008)
- சாகித்ய அகாதமி பொதுக்குழு / தமிழ் ஆலோசனைக் குழு உறுப்பினர் (1993 - 1998)
- எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் தமிழ்ப்பேராயம் செயற்குழு, விருதுக்குழு உறுப்பினர்.
- தலைவர், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் (2000 - 2005)
- தலைவர், ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு மன்றம் (2009)
- தலைவர், கவிஞர் சிற்பி அறக்கட்டளை
- தலைவர், பி.எம்.எஸ்., அறக்கட்டளை

- செயலர், பொள்ளாச்சி இலக்கியக் கழகம்
- உறுப்பினர், பாரதிய வித்யா பவன் நிர்வாகக் குழு, கோவை
- உறுப்பினர், டாக்டர் NGP கல்லூரிக் குழு, கோவை
- முன்னாள் உறுப்பினர், Afirm cancan either eitherraiseraise Money Moneyusing Equity,Equity, Equity,or using Debt DebtRKR கல்வியியல் கல்லூரிக் குழு, உடுமலைப் பேட்டை
- தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் ஆசிரியர் தேர்வுக்குழு, பாடத்திட்டக்குழு முன்னாள் உறுப்பினர்
- பல்கலைக்கழக மானியக்குழு, மத்திய அரசு பண்பாட்டுத்துறை, மத்திய அலுவலர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசு செயலர் தேர்வாணையத் தேர்வுக்குழு முன்னாள் உறுப்பினர்
- உறுப்பினர், நிர்வாகக்குழு, பாரதியவித்யா பவன், கோவை
- சென்னை, அண்ணாமலை, பாரதியார், பாரதிதாசன், கொல்கத்தா, அழகப்பா, மதுரை, கேரளப் பல்கலைக் கழகங்களிலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும் அறக்கட்டளை உரையாளர்
- பப்பாசி, புதியதலைமுறை, இளையராஜா அமைத்த பாவலர் வரதராஜன் நினைவு விருதுக்கான தேர்வுக்குழு உறுப்பினர்

4.1 சிற்பி

https://www.tamilvu.org/courses/degree/p103/p1032/html/p1032411.htm

தமிழ்நாட்டின் தென்மேற்கு எல்லையில் கேரளத்தை ஒட்டி இருக்கும் மாவட்டம் கோயம்புத்தூர். கோவை என்ற இந்த மாவட்டத்தில் உள்ள **ஆத்துப் பொள்ளாச்சி**யில் 29-7-1936-இல் பிறந்தார். **பொ.பாலசுப்பிரமணியன்** என்ற தம் பெயரைக் கவிதைக்காகச் **சிற்பி** என்று புனைந்து கொண்டார்.



- **கல்வியும் பணியும்**

இளம் வயதிலேயே கவிதைகள் எழுதினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். மலையாள மொழியையும் நன்கு அறிந்தவர். மலையாள மகாகவி வள்ளத் தோளுடன் தமிழ் மகாகவி பாரதியை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்து முனைவர் (பிஎச்.டி) பட்டம் பெற்றார். பொள்ளாச்சி நாச்சிமுத்துக் கவுண்டர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி ஆற்றினார். பின்னர்க் கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணி ஆற்றி ஓய்வு பெற்றார்.

- **கவிஞர் சிற்பி**

மரபு இலக்கிய இலக்கணப் பயிற்சி பெற்றுப் பின்னர்ப் புதுமை நாட்டத்தால் புதுக்கவிதை எழுத வந்த கவிஞர்களுள் பலர் தமிழ்ப் பேராசிரியர்கள். **சிற்பி, மீரா, அப்துல் ரகுமான், அபி, நா.காமராசன், தமிழன்பன், இன்குலாப், மு.மேத்தா**..... என்று இப்பட்டியல் நீளும். இவர்களுள் தமக்கென்று ஒரு தனி வழி வகுத்துக் கொண்டு எழுதி வருபவர் சிற்பி.

பொதுவுடைமைக் கொள்கையில் ஈடுபாடு கொண்டவர். **வானம்பாடி** கவிதை இயக்கத்தின் உந்து விசையாய் இருந்து, புதுக்கவிதை வளர்ச்சியில் பங்கேற்றவர்.

- **படைப்புகள்**

நிலவுப்பூ (1963), **சிரித்த முத்துக்கள்** (1968), **ஒளிப்பறவை** (1971), **சர்ப்ப யாகம்** (1974), **புன்னகை பூக்கும் பூனைகள்** 1980), **மௌன மயக்கங்கள்** (1982), **சூரிய நிழல்** (1991), **இறகு** (1996) **ஒரு கிராமத்து நதி** முதலிய கவிதை நூல்களைப் படைத்திருக்கிறார். இன்னும் எழுதி வருகிறார். கவிதை நாடகம் : **ஆதிரை**, குழந்தை இலக்கியம்: **வண்ணப்பூக்கள், சிற்பிதரும் ஆத்திசூடி**.

உரைநடையிலும் பத்துக்கு மேற்பட்ட நூல்களையும், ஆங்கிலத்தில் ஒரு நூலையும் படைத்துள்ளார்.

- **விருதுகள்**


சாகித்ய அகாதமி விருது, தமிழ்நாடு அரசின் பரிசு, பாவேந்தர் விருது, தமிழ்ப்பல்கலைக் கழகப் பரிசு எனப் பல பெருமைகளைப் பெற்றவர்.

தம் பெயரில் ஒரு 'கவிதை அறக்கட்டளை'யை நிறுவி இருக்கிறார். ஆண்டுதோறும் சிறந்த முதுபெரும் கவிஞர் ஒருவரையும் இளங்கவிஞர் ஒருவரையும் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கிப் பாராட்டி வருகிறார்.

இக்காலத் தமிழ்க் கவிஞர்களுள் ஒரு தனிச்சுடராய் ஒளிர்கிறார்.

நூல்கள்

https://www.tamilvu.org/ta/courses-degree-p103-p1032-html-p1032413-25854



சிற்பியின் படைப்புலகம்

கவிதை

- நிலவுப் பூ (1963) - கோலம் வெளியீடு, பொள்ளாச்சி முதற்பதிப்பு-1963
- சிரித்த முத்துக்கள் (1968) - மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-1968
- ஒளிப்பறவை (1971) - அன்னம் வெளியீடு, சிவகங்கை, முதற்பதிப்பு-1971
- சர்ப்ப யாகம் (1976) - கோலம் வெளியீடு, பொள்ளாச்சி, முதற்பதிப்பு-1976
- புன்னகை பூக்கும் பூனைகள் (1982) - அன்னம் வெளியீடு, சிவகங்கை, முதற்பதிப்பு-1982
- மௌன மயக்கங்கள் (1982) (தமிழக அரசு பரிசு பெற்றது)
- சூரிய நிழல் (1990) - கோலம் வெளியீடு, பொள்ளாச்சி, முதற்பதிப்பு-1990, இரண்டாம் பதிப்பு-1995
- இறகு (1996) - கோலம் வெளியீடு, பொள்ளாச்சி
- சிற்பியின் கவிதை வானம் (1996) - (திருப்பூர் தமிழ்ச்சங்க விருது பெற்றது) மணிவாசகர் பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு-1996
- ஒரு கிராமத்து நதி (1998) (சாகித்ய அகாதெமி விருது பெற்றது)
- பூஜ்யங்களின் சங்கிலி (1999) (தமிழக அரசு பரிசு பெற்றது) - கோலம் வெளியீடு, பொள்ளாச்சி
- பெருமூச்சுகளின் பள்ளத்தாக்கு (2001)
- பாரதி - கைதி எண்: 253 (2002)
- மூடுபனி (2003)
- சிற்பி: கவிதைப் பயணங்கள் (2005)

- தேவயானி (2006)
- மகாத்மா (2006)
- சிற்பி கவிதைகள் தொகுதி-2 (2011)
- நீலக்குருவி (2012)
- கவிதை வானம் (சிற்பியின் கவிதைத் தொகுப்பு)

கவிதை நாடகம்

- ஆதிரை (1992)

சிறுவர் நூல்கள்

- சிற்பி தரும் ஆத்திசூடி (1993)
- வண்ணப்பூக்கள் (1994)

கட்டுரைகள்

- இலக்கியச் சிந்தனைகள் (1989)
- மலையாளக் கவிதை (1990)
- இல்லறமே நல்லறம் (1992)
- அலையும் சுவடும் (1994)
- மின்னல் கீற்று (1996)
- சிற்பியின் கட்டுரைகள் (1996)
- படைப்பும் பார்வையும் (2001)
- கவிதை நேரங்கள் (2003)
- மகாகவி (2003)
- நேற்றுப் பெய்த மழை (2003)
- காற்று வரைந்த ஓவியம் (2005)
- புதிர் எதிர் காலம் (2011)
- மனம் புகும் சொற்கள் (2011)

வாழ்க்கை வரலாற்று நூல்கள்

- இராமானுஜர் வரலாறு (1999)
- ம.ப.பெரியசாமித் தூரன் (1999)

- பாரத ரத்னம் சி.சுப்பிரமணியம் (1999)
- ஆர்.சண்முகசுந்தரம் (2000)
- சே.ப. நரசிம்மலு நாயுடு (2003)
- மகாகவி பாரதியார் (2008)
- நம்மாழ்வார் (2008)
- தொண்டில் கனிந்த தூரன் (2008)

கட்டுரைகள்

- தேனீக்களும் மக்களும் (1982)
- சாதனைகள் எப்போதும் சாத்தியந்தான் (கிரண்பேடி) (2006)
- வெள்ளிப்பனி மலையின்மீது (எம்.பி.வீரேந்திரகுமார்) (2009)

இலக்கிய வரலாறு

- தமிழ் இலக்கிய வரலாறு (2010)

மொழிபெயர்ப்பு நூல்கள்

கவிதைகள்

- சச்சிதானந்தன் கவிதைகள் (1998)
- உஜ்ஜயினி (ஒ.என்.வி.குரூப்) (2001)
- கவிதை மீண்டும் வரும் (சச்சிதானந்தன்) (2001)
- காலத்தை உறங்க விடமாட்டேன் (என்.கோபி) (2010)
- கே.ஜி. சங்கரப்பிள்ளை கவிதைகள் (2012)

நாவல்கள்

- அக்கினி சாட்சி (லலிதாம்பிகா அந்தர்ஜனம்) (1996) (சாகித்ய அகாதெமி விருது பெற்றது)
- ஒரு சங்கீதம் போல (பெரும்படவம் ஸ்ரீதரன்) (1999)

- வாராணசி (எம்.டி.வாசுதேவன் நாயர்) (2005)

ஆங்கில நூல்

- A Comparative Study of Bharati and Vallathol (1991)

அறக்கட்டளை சொற்பொழிவு நூல்கள்

- கம்பனில் மானுடம் (2002)
- இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை (2006)
- பாரதிதாசனுக்குள் பாரதி (2011)

உரை நூல்கள்

- திருப்பாவை: உரை (1999)
- திருக்குறள்: சிற்பி உரை (2001)
- மார்கழிப்பாவை (2009) (திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி உரை)

தொகுப்பு நூல்கள்

- நதிக்கரைச் சிற்பங்கள் (2012)

பதிப்பித்த நூல்கள்

- மகாகவி பாரதி சில மதிப்பீடுகள் (1982)
- பாரதி - பாரதிதாசன் படைப்புக்கலை (1992)
- தமிழ் உலா I & II (1993)
- பாரதி என்றொரு மானுடன் (1997)
- மருதவரை உலா (1998)
- நாவரசு (1998)
- அருட்பா அமுதம் (2001)
- பாரதியார் கட்டுரைகள் (2002)
- மண்ணில் தெரியுது வானம் (2006)
- கொங்கு களஞ்சியம் (2006)

- வளமார் கொங்கு (2010)

ஆய்வுகள்

- தமிழ் இலக்கியத்தில் விடுதலை இயக்கத் தாக்கம் (1989 - 1991)
- இடைக்காலக் கொங்கு நாட்டின் சமூக - பொருளாதார அமைப்புகள் (1993 - 1997)
- கொங்கு களஞ்சியம் - இரு தொகுதிகளின் பதிப்பாசிரியர்

சிற்பியின் கவிதைகள்

https://www.tamilvu.org/ta/courses-degree-p103-p1032-html-p1032413-25854

4.3 சிற்பியின் கவிதைகள்

கல், மரம் இவற்றை உளியால் செதுக்கி அழகிய சிலைகளை வடிப்பவனைச் சிற்பி என்கிறோம். மண், பாரீஸ் பிளாஸ்ட்டர் போன்ற குழைவுப் பொருள்களால் அழகான உருவங்களைச் செய்பவனையும் சிற்பி என்போம்.

சிற்பக் கலை என்பதே தேவையானதை வைத்துக் கொண்டு தேவையற்ற பகுதிகளைச் செதுக்கித் தள்ளுவது தானே? கவிஞன் என்னும் சொற்சிற்பி படைக்கும் உலகம் மிக அழகாக இருக்கிறது. மிகச் சரியானதாக இருக்கிறது. குறைகள் அற்றதாக இருக்கிறது. உண்மை உலகம் தன் குறைகளைப் பார்த்துப் பார்த்து நீக்கிக் கொள்ள வழிகாட்டும் ஒரு 'மாதிரி' உலகமாக ஆகிவிடுகிறது.

கவிஞர் சிற்பி, அழகு உணர்ச்சியும், உயர்ந்த ஒழுக்கமும், தூய்மையும், மனித நேயமும், சொல்லை ஆளும் வல்லமையும் படைத்த நல்ல மனிதர். இதனால் இவர் படைக்கும் உலகம் குறைகள் இல்லாத தூய உலகமாய் இருக்கிறது. அதனுள் நுழையும் நமது

குறைகளையும் நீக்குகின்ற மாய உலகமாய் இருக்கிறது. அதனுள் நுழைவோம் வாருங்கள்.

4.3.1 மனித நேயத்தின் சிறப்பு

அழகு எதில் இருக்கிறது?

முன்னோர்கள் கவிதைக்கு இலக்கண மரபு வகுத்தது போல், அழகுக்கும் இலக்கணம் வகுத்து வைத்து விட்டனர்.

- **அழகிய பெண்**

அவளுடைய உடல் அழகை முடிமுதல் அடிவரை வருணனை செய்வது கவிஞர்களின் திறமையைக் காட்ட ஒரு வாய்ப்பு. அவள் உடல் மலர்போல் மெல்லியது; பொன்போல் சிவந்த நிறம் கொண்டது; நிலாமுகம்; தாமரை முகம்; பிறைநெற்றி; கயல் விழிகள்; முத்துப் பற்கள்; பவள இதழ்; மேகம் போன்ற கூந்தல்; மிக மெல்லிய இடை; நூலை விட இளைத்த அந்த இடை தலையில் சூடும் ஒரு பூவைக் கூடச் சுமையாக உணரும்; அந்தப் பூவில் தேன் உண்ண வரும் வண்டின் சிறகு அசையும் போது வீசும் சிறு காற்றைக் கூடப் புயல்போல் உணர்ந்து தாங்காமல் தளரும்!

அவளது பாதங்கள்தாம் எவ்வளவு மென்மை!

உலகிலேயே மிக மெல்லியவை அனிச்சப் பூவும் அன்னப் பறவையின் மெல்லிய இறகும். அவை பட்டால் கூட அவள் பாதங்கள் நெருஞ்சி முள் தைத்தது போலப் புண்பட்டு இரத்தம் வடிக்குமாம்!

இந்த வகையான கற்பனைகள், கருத்துகள் எதைக் காட்டுகின்றன? சிறிது சிந்தியுங்கள். ஆண், தன் ஆசையையே பெண்ணின் அழகாகக் காண்கிறான். பெண்ணைப் போகப் பொருளாகக் காண்கிறான். இந்த இலக்கணங்கள் அமையாத பெண், மரபான பார்வையில் அழகி இல்லை.

மனிதன் செல்வ வளத்தில் வளர வளர அவனுக்குள் ஒரு பணக்காரத்தனம் வந்துவிடுகிறது. அது அவனது கருத்துகளிலும் படிந்து விடுகிறது. பொருளாதாரத்தில், சாதிப் பிறப்பில், நிறத்தில் தனக்குக் கீழே தங்கிவிட்ட

எவரையும் தாழ்வாக எண்ணுகிறான். இதை 'மேட்டுக்குடிக் கருத்தாக்கம்' என்பர்.

நண்பர்களே, அழகியல் பற்றிய 'மேட்டுக்குடிக் கருத்தாக்கம்' தான் மேலே நாம் கண்ட 'அழகிய பெண்' பற்றிய கருத்தும். இந்தத் தவறான கருத்தாக்கத்தை உடைத்து, உண்மையான அழகு எது என்று சமூகத்துக்குக் காட்ட வேண்டும். சிற்பி அதைத் தம் கவிதையில் செய்கிறார்.

• உண்மையான அழகு

கூலிக்காரி (சிரித்தமுத்துக்கள்) கவிதையைப் படியுங்கள்.

கூலிக்காரி லெட்சுமி கட்டட வேலை செய்யும் சிற்றாள். பழைய துணியைச் சுருட்டித் தலையில் வைத்து, அதன்மேல் இரும்புச் சட்டியை வைத்திருக்கிறாள். அதில் நிறையக் கனமான கல்லும் மண்ணும். தாங்க முடியாத பசியைத் தாங்க உணவு வேண்டும். அதைத் தேட உழைப்பவள் அவள்; அதனால் அவளது 'இடை' இந்தக் கனமான சுமையை நாள் முழுதும் தாங்கும் வன்மையான இடை.

கால் கடுக்கிறதே என்று சில நிமிடங்கள் ஓய்ந்து நின்றாலும் கொத்தனார் திட்டுவார். அதனால் ஓய்வே இல்லாமல் அவளது பாதங்கள் காரைச் சுண்ணாம்பிலும் கல்லிலும் நடக்கும். கொப்புளம் கண்டாலும் தாங்கிக் கொள்ளும்.

கறுத்த உடல்தான். ஒரு சிறு தங்கத் தோடு தவிர உடம்பில் அலங்கார அணிமணிகள் இல்லை. தலையில் பூக்கூட இல்லை, புழுதிதான். இவளிடம் தான் உண்மை அழகு சிரிக்கிறது. அழகையே படைக்கும் உழைப்பின் அழகு அது. சிற்பி இதைக் காண்கிறார். நமக்குக் காட்டுகிறார் :

பார்வைக் கணைகள் பட்டுக் இழுத்துக் கட்டிய முக்காட்டின் மேல்
தெருப் புழுதியின் பூச்சு - கொஞ்சம்
இங்கும் அங்கும் பார்த்து நின்றால்
கொத்தனாரின் ஏச்சு !

கிழிந்த
பழைய ரவிக்கைக் கந்தல் - அவள்
வேர்வை மணக்கும் மார்பின் சரிவை
மூடும் சேலைப் பந்தல்

துணுக்குத் தங்கத்தை இணுக்கி வைத்த
தோட்டில் வறுமை சிரிக்கும் - அவள்
முணுமுணுத்திடும் தெம்மாங்கு இசைக்கு
முத்தமிழ் முந்தி விரிக்கும்
இழைத்த கறுப்பில் குழைத்த மேனி
லெட்சுமி சிற்றாள் கூலி - அவள்
உழைக்கும் கரத்தைப் பற்றிடும் காளை
உண்மையில் புண்ணிய சாலி!

வறுமையால் கிழிந்து பழந்துணி ஆகிவிட்டது அவளது சட்டை. அந்தக் கிழிசல்கள் காமப் பார்வை பார்ப்பவர்களின் பார்வை அம்புகளால் ஏற்பட்டவை என்கிறார். ஓயாத வேலையின் இடையிலும் சேலையை இழுத்துப் போர்த்திக் கொள்ளும் அவளது மான உணர்வைப் போற்றுகிறார்.

பெயர் இலட்சுமி, திருமகள். மேட்டுக்குடிக் கருத்தாக்கத்தில் செல்வச் செழுமைக்குக் கடவுள். இவளோ, வறுமையின் வடிவமாக இருக்கிறாள். ஒரு முரண் அழகு. சிற்பியின் மனித நேயக் கருத்தாக்கத்தில் இவள்தான் திருவின் செல்வி; இவள்தான் அழகி.

இந்தக் கூலிக்காரி வறுமையைக் கண்டு அழும் கோழை அல்ல. அவளது சின்னத் தோட்டில் வறுமை சிரிக்கிறது. இந்த வறுமையின் செல்வி - இலட்சுமி முணுமுணுக்கும் தெம்மாங்குப் பாட்டின் இனிமையைப் பிச்சையாகக் கேட்டு,இயல், இசை, நாடகம் என்னும் மரபான முத்தமிழும் முந்தானையை விரிக்கின்றன. இது, ‘புதுக்கவிதை என்பது என்ன?’ என்ற கேள்விக்குத் தக்க விடையாகவும் அமைகிறதல்லவா?

கடவுளை அடைபவன் புண்ணியசாலி அல்ல. இவள் காதலை அடைபவன்தான் புண்ணியசாலி என்கிறார் சிற்பி.

உழைக்கும் மக்களைக் கடவுள் நிலைக்கு உயர்த்துகிறார். இதுதான் சிற்பியின் அழகியல்.

"மரபு - இலக்கணம் கற்றவன்; இலக்கியம் அறிந்தவன் நான். எனவே இலக்கிய உலகமே எனக்குத்தான் உரிமை" என்பதும் கூட ஒருவகை மேட்டுக்குடிக் கருத்தாக்கம்தான். இலக்கியத்தை மக்களிடம் மீட்டு வருவதற்கு, இதை உடைக்க வேண்டும். புதுக்கவிதை இதைத்தான் செய்கிறது.

• சிற்பியின் புரட்சி

எனவே புதுக்கவிதை என்பது மொழியின் வரம்பை, கட்டுப்பாட்டை உடைப்பது அல்ல. மொழிக்குள் இயங்கும் மேட்டுக்குடி மனப்போக்கை உடைப்பதுதான்.

இந்தப் புரட்சியை ஒரு மரபுக் கவிதையைக் கொண்டு செய்கிறார் சிற்பி. மேற்காட்டிய கவிதை, சந்தப் பாட்டாக, யாப்பு வடிவில் இருந்தாலும் புதிய பார்வையால், புதுக்கவிதை என்ற தகுதி பெறுகிறது.

• கவிஞரின் தாஜ்மகால்

தாஜ்மகால், ஒளிப்பறவை என்னும் நூலில் உள்ள அழகிய கவிதை. தாஜ்மகாலை உலகத்தின் ஏழாவது அதிசயம் என்பர். அது காதலின் அழகுச் சின்னம். உலகக் கவிஞர்கள் பலரும் அதைக் கவிதைகளால் அலங்கரித்து உள்ளனர். சிற்பியும் தமிழில் புனைந்து பாடுகிறார் :

வாடாத வெள்ளைத் தாமரை
மேகம் தொட்ட மோக மொட்டு
பால்இடைக் குளிக்கும் பளிங்கு மண்டபம்.....
ஆசையின் மடியில் ஷாஜஹான்
அள்ளி இறைத்த வெள்ளிக் காசு
யமுனையின்,
நீலக் கூந்தலில் நிகர்இல்லா வைரம்......

எனப் பலவாறு உருவகங்களை அடுக்கிப் பாராட்டுகிறார். சட்டென்று உலகின் இருப்பு (எதார்த்தம்) நிலைக்குப் பார்வையைத் திருப்புகிறார். பெரும் செல்வர்க்கு மட்டும்தான் காதல் உரிமையா? கலைகள் உடைமையா? தாமும் தாஜ்மகால் கட்டியதுண்டே ! ஷாஜஹானின் தாஜ்மகாலை விடப் பன்மடங்கு அழகான தமது தாஜ்மகாலை நினைவு கூர்கிறார்.

ஓ ! நான் காதலிக்கு மனதில்
கட்டி முடித்ததும்
மாது சலித்ததும்
நானே இடித்ததும்
இதனைக் காட்டிலும்
மதுரக் கோபுரம்
இதனைக் காட்டிலும்
அதிசயக் காவியம்

(**பால்இடைக் குளிக்கும்** = நிலவின் பால்போன்ற ஒளியில் குளிக்கும்; **மாது சலித்தது** = பெண் தனக்குப் பிடிக்கவில்லை என்று ஏற்க மறுத்தது; **நிகர்இல்லா** = ஒப்பு இல்லாத)

'மனத்தில் இதைவிட இனிமையாய், அழகாய்க் கட்டினேன். காதலிக்குப் பிடிக்கவில்லை. இடித்து விட்டேன்' என்று சொல்கிறார். என் காதல் எதையும் விட உயர்ந்தது; 'என்னால் முடியும்' என்னும் தன்னம்பிக்கை அதையும்விட உயர்ந்தது என உணர்த்துகிறார். இயலாதவன் செய்யும் கற்பனையை மனக்கோட்டை என்பார்கள். அந்த மரபுத் தொடரை அர்த்தம் அற்றதாய் ஆக்குகிறார். மனக்கோட்டைதான் மனத்தின் காதல் விரிவை, கற்பனை ஒளியை உண்மையாய்க் காட்டுகிறது. ஒரு புதுமை பிறக்கிறது.

4.3.2 இயற்கை

இயற்கைதான் அனைத்துக்கும் தாய். அவளுக்கு உள்ளிருந்து பிறந்து அவள் மடியிலேயே வளர்ந்தவன் மனிதன். வளர்ந்த போது 'செயற்கை' என்ற பெண்ணின் காதலுக்குள் தள்ளப்பட்டான். தாயைப் புறக்கணித்தான். தன்னையும் சூழலையும் கெடுத்துக் கொண்டான். உலகில் இன்று இயற்கையின் மாறுபாட்டால் எத்தனையோ தொல்லைகள். இப்போது சுற்றுச்சூழல் பற்றிக் காலம் கடந்த பின் சிந்திக்கிறான். அதைப் பாதுகாக்கும் விழிப்புணர்வு பற்றிப் பல மேடைகளிலும் பேசப்படுகிறது. இயக்கங்கள் நடத்தப் படுகின்றன.

- **கவிஞனும் இயற்கையும்**

கவிஞன் என்றும் இயற்கையின் குழந்தைதான். ஒரு பூ உதிர்ந்தால் அவன் நெஞ்சுக்குள் பூகம்பம் ஏற்படுகிறது. ஒரு மரம் வெட்டப்பட்டால் அவனது ஆன்மாவில் இரத்தம் கொட்டுகிறது.

சிற்பியின் **இறகு** நூலில் உள்ள **இறகு** என்னும் கவிதையைப் பாருங்கள்.

பார்த்ததே இல்லை
எனினும்
கேட்டதுண்டு
காலம் இல்லை நேரம் இல்லை
அந்திகளில் கருக்கு இருட்டில்
நண்பகலில் மாலைகளில்
வேளை இன்னது என்றில்லை
மெய்சிலிர்க்க வைத்த குரல்.....

கோடைகளில் கொப்பளித்து
மழைக்குப் பொத்தல் குடைஆகும்
என்வீட்டின் மேற்குப் புறத்தில்
இன்னொருவர் நிலத்தில்
ஒரு பச்சைப் பிரளயம்போல்
நிற்கும் வேப்ப மரம்

என் கூரையின்மேல் நிழல்தூவும்
குளிர்காற்றைத் தூதுவிடும்
சிலபோது
மனதைக் கவ்வும் ஒரு மாயமாய்
ஏகாந்தப் புல்லாங் குழலாய்
இலை அடர்த்திக்கு உள்ளிருந்து
கூவி இழுக்கும்
ஒரு குயிலின் குரல் தூண்டில்!

மகளுக்குத் தலைசீவிப் பேன்பார்க்க, மகனுக்குப் பாடம் சொல்ல, கதை சொல்லிச் சோறு ஊட்ட, அக்கம் பக்கத்துப் பெண்களுடன் ஊர்ச் செய்தி பேச - இவர் மனைவிக்கு இந்த மர நிழல்தான் உரிமையான தாய்வீடு. கவிஞரின் பாட்டுக்குக் குடியிருப்பு.

• பிள்ளைகளின் அழுகை

வெளியூர் போனார். மூன்று நாட்கள் பயணம் முடிந்து வீடு திரும்பினார். வீட்டில் துயரமான சூழல். பிள்ளைகள்

அழுகின்றன. “நிலத்துக் காரங்க வெட்டித் தள்ளிட்டாங்க”. செய்தி கேட்டுத் துடிக்கிறார்.

பதைக்கப் பதைக்க ஓடினேன்
பச்சைச் சமுத்திரம்
அலைபாய்ந்த இடத்தில்
வெட்டவெளி வெறும் பரப்பு

என்நிழல் என்உயிர்க்காற்று
என்ஆன்ம சங்கீதம்
சுள்ளிகள் உலர்ந்த இலைகள்
மரத்துணுக்குகள்.......
வெட்டப்பட்ட அடிமரம்
பூமியின் காயமாய்
விரிசல் விட்டுக் கிடந்தது

பாழ்வெளியில் அதன்
பக்கத்தில் உட்கார்ந்தேன்
எங்கிருந்தோ ஓடிவந்த மகள்
“இதைப் பாருங்கப்பா”
என்று கையில் கொடுத்தாள்

கருமை பளபளக்கப்
பழுப்பு அலைபாயும்
ஓர் இறகு

இக்கவிதையைப் படித்து முடித்ததும், நம் மனம் கசிகிறது.

ஒரு மரம் செத்துவிட்டது. அதற்கு அழும் கவிக்குடும்பத்தோடு நாமும் சேர்கிறோம், துக்கம் கொண்டாட !

• மரமா செத்தது?

ஒரு மரம் மட்டுமா செத்தது? ஒரு நிழல் செத்தது. குளிர்ச்சி செத்தது. மனிதன் பறவை என்று பேதம் பார்க்காத ஓர் இயற்கை வீடு செத்தது. தூய்மையான உயிர்க்காற்றை வழங்கிவந்த மூச்சுப்பை செத்தது. கண்களில் குளிர் அலைவீசிய பசுமைக் கடல் செத்தது. அமர்ந்து பாட்டெழுதும் ஒரு கலைக்கூடம் செத்தது. தன் மகனான

கவிஞனுக்குத் துன்ப நேரங்களில் ஆறுதல் தர ‘அன்னை இயற்கை’ வைத்திருந்த இசை மேடை செத்தது.

இதனால், கவிஞரின் கண்களுக்கு மரம் இருந்த இடம் எப்படித் தோற்றம் தருகிறது பாருங்கள் :

ஒரு பச்சைக் கடல் இருந்து, காய்ந்து உலர்ந்து ஆவியாகிவிட்டது; அதன்பின் மிஞ்சியுள்ள வெறும் மணல் பரப்பாக அந்த இடம் தோன்றுகிறது. அவரது நிழல், உயிர்க்காற்று, ஆன்ம சங்கீதம் இவைதாம் அங்கு உதிர்ந்து சுள்ளிகளாய், உலர்ந்த இலைகளாய், மரத்துண்டுகளாய்ச் சிதறிக் கிடக்கின்றன. வெட்டப்பட்ட அடிமரம் பூமியின் புண்ணாய் வலியோடு விரிந்திருக்கிறது.

மரம் இருந்த இடம் வெட்ட வெளியாகி விட்டது. ஒரு மரத்தின் சாவில் உலகத்தையே பாலை வெளியாக்கும் ‘இயற்கை அழிவு’ காட்டப்பட்டு விட்டது. ஒரு மனித மனத்தின் பதைப்பில் (துடிப்பில்) உலகத்தின் துடிப்பே உணர்த்தப்பட்டு விட்டது.

இதுதான் கவிதை. ஓர் உயர்ந்த கவிதை இப்படித்தான் உணர்வின் துடிப்பாக இருக்கும்.

இதில் உச்சமான உணர்வுநிலை எது? நண்பர்களே, கொஞ்சம் உற்று நோக்குங்கள் :

கவிஞர் அந்தக் குயிலை நேரில் பார்த்துக் கொண்டதில்லை. கேட்கும் புலன் வழியே உணர்வு ஒன்றியது. இயற்கையாய் உருவாகி இருந்தது ஒரு நட்பு, ஒரு நேயம்! அது செத்துவிட்டது.

மரக்கிளைக் குயிலுக்கும் கவிஞன் என்னும் மானுடக் குயிலுக்கும் இருந்த இசைமயமான நட்பு, அது செத்து விட்டது. எவ்வளவு பெரிய இழப்பு? எத்தனை பெரிய வருத்தம் ! இன்னும் எத்தனை வருத்தங்கள்......

இயற்கையை அழித்துக் கொண்டே இருக்கும் தன் சகோதர மனிதனின், ‘மனிதத் தன்மை’ இறந்ததற்கு வருத்தம்.

குயில் நண்பன் வீடு இழந்ததற்கு வருத்தம்.

மனிதன் பூமியை எங்கே தள்ளிக் கொண்டு போகிறான்? பயிர் இனம் உயிர் இனம் எல்லாம் அழியும் ‘பாழ்வெளி’ நோக்கியா?

- **குயில் இறகு**

குழந்தை, தன் பிஞ்சுக் கையில் எடுத்து வந்த குயில் இறகு, உதிர்ந்த இறகு. மெல்லிய இறகு, ஒரு வலிமையான எச்சரிக்கையின் சின்னம் ஆகிறது. என்ன எச்சரிக்கை?

உலகம் மட்டும் அல்ல. ஒவ்வோர் உள்ளமும் ஈரம் வற்றி வறண்டு அழியப் போகிறது. மென்மை என்ற தன்மையே வேர்இன்றிக் கருகப் போகிறது. பூமி அன்பில்லாத ஒரு பாலை நிலமாக மாறி வருகிறது. இதை மனிதனுக்கு நினைவூட்டி எச்சரித்துக் கொண்டே இருக்க ஓர் அடையாளம், குறியீடு தேவை. குயில் இறகு அந்தக் குறியீடு ஆகிறது.

குழந்தைகள் நினைவுச் சின்னமாகப் புத்தகத்தில் மயில் இறகை வைப்பார்கள்; அது ‘குட்டி’ போடுமாம்.

கவிஞர் சிற்பி புத்தகத்தில் குயில் இறகு வைத்திருக்கிறார், நம் மனத்தில் அது ‘இயற்கையை நேசி’ ‘இயற்கையைப் போற்று’ என்னும் மென்மையான எண்ணங்களைக் குட்டிகளாய் (குஞ்சுகளாய்)ப் பெற்றெடுக்கட்டும் என்று !

தமிழ்த்துறையில் இருமுறை சாகித்திய அகாதமி விருது பெற்றவர் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் ஆவார். அவர் படைப்பிலக்கியம் மற்றும் மொழிபெயர்ப்பு ஆகிய இரு பிரிவுகளில் இந்த உயரிய விருதை வென்றுள்ளார்.

விருது விவரங்கள்:

- **2001 (மொழிபெயர்ப்பு):** லலிதாம்பிகா அந்தர்ஜனம் எழுதிய 'அக்கினி சாட்சி' (மலையாளம்) என்ற நாவலைத் தமிழில் மொழிபெயர்த்ததற்காக.
- **2003 (படைப்பிலக்கியம்):** 'ஒரு கிராமத்து நதி' என்ற கவிதை நூலுக்காக.

பாரதியார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றிய சிற்பி, 130-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

(குறிப்பு: சௌராஷ்ட்ர மொழிப்பிரிவிலும் இருவர் சாகித்ய அகாதமி பாஷா சம்மான் விருது பெற்றுள்ளனர், ஆனால் தமிழ் படைப்பிலக்கியத்திற்காக இருமுறை விருது பெற்றவர் சிற்பி பாலசுப்பிரமணியம் என்பது குறிப்பிடத்தக்கது.)

கவிஞர் சிற்பி ஆவணப்படம்

அறிவிப்பு

https://www.sramakrishnan.com/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF-%E0%AE%86%E0%AE%B5%E0%AE%A3%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%9F%E0%AE%AE%E0%AF%8D/

இந்திரன் தமிழின் முன்னோடி கலைவிமர்சகர். ஓவியம். சிற்பம். வரைகலை எனக் கலைகள் குறித்துத் தொடர்ந்து எழுதியும் பேசியும் வரும் இவர் தமிழ் அழகியல் குறித்துத் தனித்த பார்வைகள் கொண்டவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் இவர் எழுதியுள்ள கட்டுரைகள் மிகுந்த பாராட்டிற்குரியவை.

தனித்துவமான கலையாளுமையாக விளங்கும் இந்திரன் கவிஞர் சிற்பி குறித்த ஆவணப்படம் ஒன்றை இயக்கியுள்ளார்.

சிற்பி பாலசுப்பிரமணியம் எனும் கவிஞர் சிற்பி, பேராசிரியர் மொழிபெயர்ப்பாளர், ஆய்வாளர், பாடத்திட்டக்குழு உறுப்பினர். இதழாசிரியர் சாகித்ய அகாதமி தமிழ் ஆலோசனைக் குழு ஒருங்கிணைப்பாளர் எனப் பன்முகத்தன்மைகள் கொண்டவர். மொழிபெயர்ப்புக்காகவும், படைப்பிலக்கியத்துக்காகவும் இருமுறை சாகித்திய அகாதமி விருது பெற்றவர்.

ஆத்துப்பொள்ளாச்சி என்ற அழகிய சிற்றூரில் பிறந்து வளர்ந்து கேரளாவின் பாலக்காட்டில் உள்ள தத்தமங்கலம் சீலி நினைவு உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்து அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் தமிழ் பயின்று பொள்ளாச்சி நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ் கவிதையுலகில் சிறந்த கவிஞராகவும், ஆளுமையாகவும் சிற்பி உருவான விதம் பற்றி இந்த ஆவணப்படம் அழகாகச் சித்தரிக்கிறது. இந்த ஆவணப்படத்தை அழகிய மணவாளன் நேர்த்தியாக ஒளிப்பதிவு செய்திருக்கிறார். குறிப்பாக நதிக்கரையோரக் காட்சிகளும், தத்தமங்கலம் பள்ளிக்காட்சிகளும், நேர்காணல்கள் செய்யப்பட்டுள்ள விதமும் பாராட்டிற்குரியவை.

இந்திரன் தேர்ந்த கலைத்திறன் கொண்டவர் என்பதால் இந்த ஆவணப்படத்தைக் கலைநுட்பத்துடன் உருவாக்கியிருக்கிறார். அவருக்கு என் மனம் நிறைந்த பாராட்டுகள்.

மெய்வேந்து

https://meyveendu.blogspot.com/2025/08/blog-post_30.html

நழுவும் பருவம் – சிற்பி பாலசுப்பிரமணியம்

தமிழிலக்கிய உலகில் கவிஞர், மொழிபெயர்ப்பாளர், பேராசிரியர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்ட சிற்பி பாலசுப்பிரமணியம், தன் படைப்புகளால் தனியிடம் பிடித்தவர். அவரது "நழுவும் பருவம்" என்ற கவிதை, கிராமிய வாழ்வின் அழகையும், கன்னித்தன்மையின் மாற்றத்தையும், விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்தையும் நுட்பமாகப் படம்பிடித்துக் காட்டுகிறது. இக்கட்டுரையில் சிற்பி பாலசுப்பிரமணியம் பற்றிய விரிவான

தகவல்களுடன், "நழுவும் பருவம்" கவிதையின் ஆழமான பொருளையும் காண்போம்.

சிற்பி பாலசுப்பிரமணியம்: ஒரு வாழ்க்கைச் சித்திரம்

சிற்பி பாலசுப்பிரமணியம், கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆத்துப்பொள்ளாச்சி கிராமத்தில் பிறந்தவர். கேரள மாநிலம் பாலக்காட்டில் பள்ளிப்படிப்பை முடித்து, திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இடைநிலை கல்வி பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழிலக்கியம் பயின்று, 1958 முதல் பொள்ளாச்சி நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். பின்னர், 1989-இல் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்று 1997 வரை சிறப்பாகப் பணியாற்றினார்.

முக்கியச் சாதனைகள் மற்றும் விருதுகள்:

மொழிபெயர்ப்புக்காகவும் (2001), படைப்பிலக்கியத்துக்காகவும் (2003) **இருமுறை சாகித்திய அகாதமி விருது** பெற்றவர். தமிழக அரசின் **பாவேந்தர் விருது**, குன்னக்குடி ஆதீனம் **கபிலர் விருது**, திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க **மகாகவி உள்ளூர் விருது**, மூத்த எழுத்தாளருக்கான **லில்லி தேவசிகாமணி விருது**, மற்றும் 2022 ஆம் ஆண்டு **பத்மசிறீ விருது** எனப் பல விருதுகளைப் பெற்றுள்ளார். இவரது கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், இந்தி, மலையாளம், மராத்தி போன்ற பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

பணிகள் மற்றும் பொறுப்புகள்:

- 1989-1997: தமிழியல் துறைத் தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம்.
- 1958-1989: விரிவுரையாளர், பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி.
- வானம்பாடி, அன்னம் விடு தூது போன்ற இலக்கிய இதழ்களின் ஆசிரியக் குழுவில் பங்களித்துள்ளார்.
- 15 பி.எச்.டி. மாணவர்களுக்கும், 6 எம்ஃபில் மாணவர்களுக்கும் நெறியாளராக இருந்துள்ளார்.
- சாகித்ய அகாதமி செயற்குழு உறுப்பினர், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத் தலைவர் எனப் பல மதிப்புறு பொறுப்புகளை வகித்துள்ளார்.

இலக்கியப் பங்களிப்புகள்:

சிற்பி பாலசுப்பிரமணியம் 20 கவிதை நூல்கள், ஒரு கவிதை நாடகம், 2 சிறுவர் நூல்கள், 13 உரைநடை நூல்கள், 8 வாழ்க்கை வரலாற்று நூல்கள், 11 மொழிபெயர்ப்பு நூல்கள், ஒரு இலக்கிய வரலாறு, ஒரு ஆங்கில நூல், 3 அறக்கட்டளைப்

பொழிவு நூல்கள், 3 உரை நூல்கள், மற்றும் 11 பதிப்பித்த நூல்களை வெளியிட்டுள்ளார். அவரது "ஒரு கிராமத்து நதி" (1998) என்ற கவிதை நூல் சாகித்திய அகாதமி விருது பெற்றது.

"நழுவும் பருவம்" கவிதையின் முழு வடிவம்

"ஓலையக்கா கொண்டையிலே
ஒரு சாடு தாழம்பூ
தாழம்பூச் சித்தா
தலை நிறைய முக்காடு ஒலே"

ஒவ்வொரு பூப்பொங்கல்
அந்திப் பொழுதும்
கன்னிப் பெண்களின் கூட்டப் பாடலாய்
பொங்கி வரும் இந்த நீரூற்று

யார் இந்த ஓலையக்காள்?

கலியாணம் ஆவதற்கு
காத்திருக்கும் பெண்கள்
மார்கழியின் காலைகளில்
பிடித்து வைத்த பிள்ளிணாரை
வழியனுப்பம் வைபவத்தில்
எழும் இந்த நறும்பாட்டு

பாவை நோன்பின் பழைய எச்சமோ...?
"மேனாட்டு ஓலையக்கா மேற்கே குடிபோறா..."

கன்னிமை
விடிவு கண்டு செல்கிறதோ?
தை மாதத் தொடக்கம்
உத்தராயண ஆரம்பகாலம்
குளிருடை பூண்ட பூமிக்குச்
சூரிய நெருப்பு ஒத்தடம் கொடுக்க
வடக்கு நோக்கி வருகிற காலம்

குளிர்ப்பருவம் தான் லையக்காளா?
இப்போது குடிமாறிப் போகிறாளா?

"பொருமி அடியிலே
பொறிக் கோழி மேயையிலே
பொருமி சலசலங்கப்
போறாளாம் ஓலையக்கா...!"

அழகான ஓலையக்காள்
சித்தாடைப் பருவத்தாள்
சேலை குறைச்சலிண்ணு
சிணுங்குசிறு ஓலையக்காள்
விடை பெறுகிறாள்

பூக்கூடைகளில் பிள்ளையார்களோடு
இரவில் தாரைத்தப்பட்டை முழங்க
தீவர்த்தி வழிகாட்ட
ஓலையக்காள் பாட்டு ஒலிக்க
ஆற்றை நோக்கி வருகிறார்கள்
கிராமத்துச் சிறுமகள்
கண்மணிக் கொலுசுகள்

ஓடும் வெள்ளத்தில்
கூடைகள் கவிழ்கின்றன
பூக்கள் சிதறுகின்றன
பிள்ளையார்கள்
ஆற்றோடு போகின்றனர்

"சிந்தாமெசிதறாமெ
வளத்துனனே புள்ளாரெ
சித்தாத்துத் தண்ணியிலே
போறயே புள்ளாரெ

வாயைக் கட்டி வயித்தைக் கட்டி
வளத்துனனே புள்ளாரெ
வாய்க்காலுந் தண்ணியிலே
போறயே புள்ளாரெ..."

ஏக்கக் குரல் எழுப்பி
விடைபெறுகிறது
கன்னி அரும்புக் கூட்டம்

தீவர்த்தி வெளிச்சத்தில்
பளபளத்துக் கொண்டே
ஓடுகிறது நதி
பிள்ளையார்களை அடித்துக்கொண்டு
பிள்ளை பருவத்தையும் கூட.

"நழுவும் பருவம்" - கவிதை விளக்கம்

"நழுவும் பருவம்" என்ற கவிதை, கிராமியச் சூழலில் நடைபெறும் விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டத்தின் பின்னணியில், கன்னிப் பெண்களின் உணர்வுகளையும், பருவ மாற்றத்தையும், பாரம்பரிய சடங்குகளையும் மிக அழகாக விவரிக்கிறது.

ஓலையக்காள்: ஒரு குறியீடு

கவிதையின் மையப் பாத்திரமாக "ஓலையக்காள்" வருகிறாள். "ஓலையக்கா கொண்டையிலே ஒரு சாடு தாழம்பூ" என்ற வரியும், அவளைப் பற்றிப் பாடும் கன்னிப் பெண்களின் பாடலும், அவள் திருமணத்திற்குத் தயாராக இருக்கும் ஒரு கன்னிப் பெண்ணின் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மார்கழியில் பெண்கள் பிடித்து வைக்கும் பிள்ளையாரை வழியனுப்பும் வைபவத்தில் எழும் இந்த நறும்பாட்டு, "பாவை நோன்பின் பழைய எச்சமோ" என்ற கேள்வியை எழுப்புகிறது. "மேனாட்டு ஓலையக்கா மேற்கே குடிபோறா" என்ற வரி, **கன்னிமை விடைபெற்றுச் செல்வதையும், புதிய வாழ்வை நோக்கி நகர்வதையும்** குறிக்கலாம். தை மாதத் தொடக்கமும், உத்தராயண காலமும், குளிர்ப் பருவத்தில் பூமிக்குச் சூரியன் ஒத்தடம் கொடுக்கும் காலமும், ஓலையக்காளும் தனது பருவத்தை மாற்றிக்கொண்டு புதிய வாழ்வைத் தேடிச் செல்லும் பருவகால மாற்றத்திற்கு இணையாகக் காட்டப்படுகிறது.

பிள்ளையார் கரைப்பு: கன்னிமையின் விடையளிப்பு

கவிதையின் பிற்பகுதி, விநாயகர் சதுர்த்தி அன்று விநாயகர் சிலைகளைக் கடலில் அல்லது ஆற்றில் கரைக்கும் சடங்கைப் பற்றியது. கிராமத்துச் சிறுமிகள், பூக்கூடைகளில் பிள்ளையார்களோடு, தாரைத்தப்பட்டை முழங்க, தீவர்த்தி வெளிச்சத்தில் ஆற்றை நோக்கி வருகிறார்கள். ஓடும் வெள்ளத்தில் கூடைகள் கவிழ்ந்து, பூக்கள் சிதறி, பிள்ளையார்கள் ஆற்றோடு போகும்போது, "சிந்தாமெ சிதறாமெ வளத்துனனே புள்ளாரெ... வாயைக் கட்டி

வயித்தைக் கட்டி வளத்துனனே புள்ளாரெ..." என்று ஏக்கக் குரலுடன் பாடுகிறார்கள்.

இந்த வரிகள், **பிள்ளையார்களை அன்புடன் வளர்த்ததைப் போல, தங்கள் கன்னிப் பருவத்தையும் கவனமாக வளர்த்ததைக் குறிக்கிறது**. ஆனால் இப்போது பிள்ளையார்கள் ஆற்று நீரில் கரைந்து போவதைப் போலவே, **தங்களது குழந்தைப் பருவமும், கன்னிப் பருவமும் கரைந்து, தொலைந்து போவதை எண்ணி ஏக்கமும் வருத்தமும் கொள்கிறார்கள்**. "பிள்ளையார்களை அடித்துக்கொண்டு பிள்ளை பருவத்தையும் கூட" என்ற இறுதி வரி, ஆற்றின் ஓட்டத்துடன் பிள்ளையார்கள் கரைவதையும், அதோடு கூட அந்தக் கன்னிப் பெண்களின் **குழந்தைப் பருவமும், கன்னிப் பருவமும் கரைந்து, ஒரு புதிய அத்தியாயம் தொடங்குவதையும்** ஆழமாகப் பதிவு செய்கிறது.

முடிவுரை:

"நழுவும் பருவம்" கவிதை, பாரம்பரிய சடங்குகள் வழியாக பருவ மாற்றத்தையும், அதனுடன் வரும் ஏக்கத்தையும், புதிய வாழ்க்கையின் தொடக்கத்தையும் சிற்பி பாலசுப்பிரமணியம் தனது தனித்துவமான கவிதை நடையில் வெளிப்படுத்தியுள்ளார். இது அவரது படைப்புத் திறனுக்கும், கிராமிய வாழ்வியல் மீதான அவரது நுட்பமான பார்வைக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

சிற்பி பாலசுப்பிரமணியத்துக்கு

சாகித்ய அகாடமி விருது

https://tamil.oneindia.com/art-culture/essays/2002/sirpi-221202.html

2002ம் ஆண்டின் சிறந்த படைப்புக்கான சாகித்ய அகாடமி விருது பெற கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தேர்வுசெய்யப்பட்டுள்ளார்.

ஒரு கிராமத்து நதி என்ற அவரது கவிதை நூலுக்காக இந்த விருது தரப்படுகிறது. இவர் இரு ஆண்டுகளுக்கு முன்பு சிறந்தமொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருதை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த முறை சிறந்த படைப்புக்கான விருதை வென்றுள்ளார். வரும் ஆண்டு பிப்ரவரி மாதம் டெல்லியில் இந்த விருதுவழங்கப்படும். ரூ. 25,000 பணமும் பாராட்டுப் பட்டயமும் இந்த விருதுடன் தரப்படும். வானம்பாடி என்ற தமிழ் கவிதை இயக்கத்தை முன்னின்று நடத்தி வரும் சிற்பி பாலசுப்பிரமணியம் இதுவரை 10 கவிதைத்தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். தனது மௌன மயக்கங்கள், பூஜ்யங்களின் சங்கிலி ஆகிய படைப்புகளுக்காக தமிழக அரசின்பாவேந்தர் விருதுகளை வென்றார். பல மொழிகளில் இவரது படைப்புகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. இவரது படைப்புகள் பல மாணவர்களால் பி.எச்டிஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இவரது வழிகாட்டுதலின் கீழ் 15 மாணவர்கள் டாக்டர் பட்டங்களையும்வென்றுள்ளனர்.

கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியன் கவிதைகள் ஆங்கிலத்தில்

டாக்டர் கே.எஸ்.சுப்பிரமணியன்

HTTPS://WWW.KEETRU.COM/INDEX.PHP?OPTION=COM_CONTENT&VIEW=ARTICLE&ACT=SECTION&ID=11060&ITEMID=139

கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியனின் தேர்ந்தெடுக்கப்பட்டக் கவிதைகளின் மொழிபெயர்ப்பு ஆங்கில நூலாக 'Sirpi Poems: A Journey' வெளிவந்துள்ளது. சிற்பி அவர்கள் இருமுறை சாகித்திய அகாதமி பரிசு பெற்றிருக்கிறார். "ஓடும் நதி" கவிதைத் தொகுதிக்காகவும் (2003), அக்னிசாட்சி மலையாள நாவல் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், சாகித்திய அகாதமியின் தமிழ் ஒருங்கிணைப்பாளராகவும் தற்போது உள்ளார். டாக்டர் கே.எஸ். சுப்ரமணியன் மொழிபெயர்த் திருக்கிறார். அக்கவிதைகள் 1968லிருந்து 2005 வரை சிற்பியால் எழுதப்பட்ட வற்றில் சில ஆகும். (வெளியீடு: கோலம், 106(50), அழகப்பா குடியிருப்பு, பொள்ளாச்சி 641 001. பக்கங்கள் : 136, ரூ. 100) டாக்டர் கே.எஸ்.எஸ். இதுவரை 6 நாவல்கள், 4 குறுநாவல் தொகுப்புகள், மூன்று தமிழ் கவிதைத் தொகுப்புகள் ஆகிவற்றை மொழிபெயர்ப்பில் வெளியிட்டுள்ளார். அவரின் நான்கு கட்டுரைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

டாக்டர் கே.எஸ்.சுப்பிரமணியன் சிற்பி கவிதைகளின் மொழிபெயர்ப்பு பற்றி கூறுகிறார் :

Sirpi a major poet in the modern era of Tamil Literature. His reputation as a poet is not merely based on the many awards which have come his way e.g. the Sahitya Akademi Award. The quality and range of his poetic creativity, his significant contribution to the genere of Tamil New Poetry spanning about four decades; his immersion in modern Tamil literature, which being deeply rooted in the rich and ancient Tamil poetic tradition; and a rare capacity to combine in himself depth of scholarship with creative sensitivity-these attributes account for his position in the modern Tamil literary field. I consider it a pleasant privilege to produce a book of translation of selected poems of this respected poet, and a dear friend.

Sirpi scales the peaks of his creative outpouring in his award winning collection "Oru Gramaththu Nadhi". "The river of a

village" revisiting his formative years in is native village. This is a delectable string of charming vignettes of lyrical nostaligia. the poet is also facinated and overwhemimed by the 'vishwaroopa' of the universe, and the awesome power and fury of nature and can conjure up a stunning vision of the sun being trashed into the bowels of distant space, plunging the earth into an open ended epoch of unrelieved Darkness. These pen pictures are riveting and find a prominent place in this volume.

ஒரு கவிதை மொழிபெயர்ப்பில்:

The Body The Mind

He
slowly sinking
into qicksand.
Frightened eyes
Saw Knees disapearing
Struggling hands
Buried
Sand vocered the chest.
Sand
Creeping up the neck
Lo, In his eyes
Rapture bloomed.
At some distance
A young shepherds
Sans blouse.

(Udalum Ullamum : 2005)

வெள்ளிப் பனிமலையின் மீது

எம்.பி.வீரேந்திரகுமார்

தமிழில் : சிற்பி பாலசுப்பிரமணியம்

மிகச்சிறந்த பயண இலக்கியத்துக்காக 'அமோசானும் துயரங்களும்' என்ற நூலுக்குக் கேரள சாகித்திய அகாதமி விருது பெற்றவர் நூலாசிரியர். 'ஹைமவதபூவில்' என்ற மலையாள மூல


நூலுக்கு வயலார் விருது பெற்றவர். பயணப்பொழுதில் உடல் மட்டுமல்ல மனமும் பயணிப்பதாக கூறும் எம்.பி.வீரேந்திரகுமார், இந்திரப்பிரஸ்தம் தொடங்கி இமயச் சாரலினூடே நிகழ்த்திய பயண அனுபவங்களின் தொகுப்பு இந்நூல். வரலாற்றுப் பாத்திரங்களான ஜகனாரா, தாரா ஷிக்கோவ், இதிகாசப் பாத்திரங்களான கர்ணன், கிருஷ்ணன் போன்றவர்களும் பயணத்தில் வந்து செல்கிறார்கள். செழிப்பான இமாலயம், அதனைச் சூழ்ந்துள்ள தொன்மங்கள், சுற்றுச்சூழல் அவ லங்கள் அனைத்தும் பின்னிப் பிணைந்த ஒரு பயண இதிகாசம் இந்நூல். மலையாள மொழியில் **20** பதிப்புகள் வெளிவந்து சாதனை படைத்திருக்கிறது இந்நூல். தமி ழில் மொழிபெயர்த்திருக்கும் சிற்பி பாலசுப்பிரமணியம் மொழிபெயர்ப்புக்கென சாகித்திய அகாதமி விருது பெற்றவர். கவிஞரும் பேராசிரியருமான இவர் சரளமான நடையில் கவித்துவம் கமழ இந்நூலை மொழிபெயர்த்திருக்கிறார். (வெளியீடு : கவிதா பப்ளிகேஷன், சென்னை. விலை ரூ. **600**)

குவிகம் தமிழ் இலக்கிய வாசல்

சிற்பி பாலசுப்பிரமணியன்

---

https://kuvikam.com/2022/02/16/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF-%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B2%E0%AE%9A%E0%AF%81%E0%AE%AA%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%AE%E0%AE%A3%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%A9%E0%AF%8D/



தமிழ் எழுத்துலகில் மிகச் சிறந்த ஆளுமைகளில் ஒருவரான சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு இந்த வருடம் குடியரசுத் திருநாளில் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது.

இவர் நமது நண்பர் இந்திரன் அவர்களின் மிகச் சிறந்த நண்பர்களில் ஒருவர். சிற்பி அவர்களுக்கு பாராட்டுவிழா நடத்தி சிறப்பிக்கும்போது அவரைப் பற்றிய ஆவணப் படத்தைத் தயாரித்து இயக்கி வெளியிட்டிருக்கிறார் இந்திரன் அவர்கள்.

40 நிமிட ஆவணப்படம் சிற்பி – இந்திரன் இருவரது திறமைகளையும் திறம்பட வெளிக்கொண்டு வந்துள்ளது. அந்தக் காணொளி இங்கே தரப்பட்டுள்ளது.

சிற்பி பாலசுப்பிரமணியம் கவிஞர், மொழிபெயர்ப்பாளர், பேராசிரியர், இதழாசிரியர் சிறந்த கவிஞர், புகழ்பெற்ற கல்வியாளர், இலக்கிய இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்ட ஒரு பல்துறை அறிஞர்.

வாழ்க்கைக் குறிப்பு



கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம் ஆத்துப்பொள்ளாச்சி கிராமத்தில் பிறந்தவர். கேரள மாநிலம் பாலக்காட்டில் உள்ள தத்தமங்கலம் சீலி நினைவு உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்தார். 1953 ஆம் ஆண்டு திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இடைநிலை கல்வி பயின்றார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பி.ஏ., ஆனர்ஸ் (தமிழ் இலக்கியம்) கற்று, 1958 முதல் பொள்ளாச்சி நல்லமுத்து மகாலிங்கம் கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தவர். 1989-இல் கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பொறுப்பேற்று 1997 வரை சிறப்புறப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

மொழிபெயர்ப்புக்காகவும் (2001), படைப்பிலக்கியத்துக்காகவும் (2003) இருமுறை சாகித்திய அகாதமி விருது பெற்றவர்.தமிழக அரசின் பாவேந்தர் விருது, குன்றக்குடி ஆதீனம் கபிலர்விருது, திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க மகாகவி உள்ளூர் விருது, மூத்த எழுத்தாளருக்கான லில்லி தேவசிகாமணி விருது எனப் பலவிருதுகள் பெற்றவர்.

1996-இல் தொடங்கப்பட்ட சிற்பி அறக்கட்டளை தமிழில் தலைசிறந்த கவிஞர்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள், பரிசுகள் அளித்து வருகிறது.

கவிதை நூல்கள் (20)

1. நிலவுப் பூ (1963) கோலம் வெளியீடு , பொள்ளாச்சி முதற்பதிப்பு-1963
2. சிரித்த முத்துக்கள் (1966) மணிவாசகர் பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு-1968
3. ஒளிப்பறவை (1971) அன்னம் வெளியீடு சிவகங்கை முதற்பதிப்பு-1971
4. சர்ப்ப யாகம் (1976) கோலம் வெளியீடு , பொள்ளாச்சி முதற்பதிப்பு-1976
5. புன்னகை பூக்கும் பூனைகள் (1982) அன்னம் வெளியீடு சிவகங்கை முதற்பதிப்பு-1982
6. மௌன மயக்கங்கள் (தமிழக அரசு பரிசு பெற்றது) (1982)
7. சூரிய நிழல் (1990) கோலம் வெளியீடு , பொள்ளாச்சி முதற்பதிப்பு-1990 இரண்டாம் பதிப்பு 1995
8. இறகு (1996) கோலம் வெளியீடு , பொள்ளாச்சி
9. சிற்பியின் கவிதை வானம் (1996)(திருப்பூர் தமிழ்ச்சங்க விருது பெற்றது) மணிவாசகர் பதிப்பகம் சென்னை, முதற்பதிப்பு-1996
10. ஒரு கிராமத்து நதி (1998)(சாகித்ய அகாதெமி விருது பெற்றது)
11. பூஜ்யங்களின் சங்கிலி (தமிழக அரசு பரிசு பெற்றது) (1999) கோலம் வெளியீடு , பொள்ளாச்சி
12. பெருமூச்சுகளின் பள்ளத்தாக்கு(2001)
13. பாரதி – கைதி எண் : 253 (2002)
14. மூடுபனி (2003)
15. சிற்பி : கவிதைப் பயணங்கள் (2005)
16. தேவயானி (2006)
17. மகாத்மா (2006)

18. சிற்பி கவிதைகள் தொகுதி – 2 (2011)
19. நீலக்குருவி (2012)
20. கவிதை வானம் (சிற்பியின் கவிதைத் தொகுப்பு)

கவிதை நாடகம்

1. ஆதிரை (1992)

சிறுவர் நூல்கள் (2)

1. சிற்பி தரும் ஆத்திசூடி (1993)
2. வண்ணப்பூக்கள் (1994)

உரைநடை நூல்கள் (13)

1. இலக்கியச் சிந்தனைகள் (1989)
2. மலையாளக் கவிதை (1990)
3. இல்லறமே நல்லறம் (1992)
4. அலையும் சுவடும் (1994)
5. மின்னல் கீற்று (1996)
6. சிற்பியின் கட்டுரைகள் (1996)
7. படைப்பும் பார்வையும் (2001)
8. கவிதை நேரங்கள் (2003)
9. மகாகவி (2003)
10. நேற்றுப் பெய்த மழை (2003)
11. காற்று வரைந்த ஓவியம் (2005)
12. புதிர் எதிர் காலம் (2011)
13. மனம் புகும் சொற்கள் (2011)

வாழ்க்கை வரலாற்று நூல்கள் (8)

1. இராமாநுசர் வரலாறு (1999)
2. ம.ப.பெரியசாமித் தூரன் (1999)
3. பாரத ரத்னம் சி.சுப்பிரமணியம் (1999)
4. ஆர்.சண்முகசுந்தரம் (2000)
5. சே.ப. நரசிம்மலு நாயுடு (2003)
6. மகாகவி பாரதியார் (2008)
7. நம்மாழ்வார் (2008)
8. தொண்டில் கனிந்த தூரன் (2008)

மொழிபெயர்ப்பு நூல்கள் (11)

கவிதைகள் (5)

1. சச்சிதானந்தன் கவிதைகள் (1998)
2. உஜ்ஜயினி (ஓ.என்.வி.குருப்) (2001)
3. கவிதை மீண்டும் வரும் (சச்சிதானந்தன்) (2001)
4. காலத்தை உறங்க விடமாட்டேன் (என்.கோபி) (2010)
5. கே.ஜி. சங்கரப்பிள்ளை கவிதைகள் (2012)

புதினங்கள் (3)

1. அக்கினி சாட்சி (லலிதாம்பிகா அந்தர்ஜனம்) (1996) (சாகித்ய அகாதெமி விருது பெற்றது)
2. ஒரு சங்கீதம் போல (பெரும்படவம் ஸ்ரீதரன்) (1999)
3. வாராணசி (எம்.டி.வாசுதேவன் நாயர்) (2005)

பிற(3)

1. தேனீக்களும் மக்களும் (1982)
2. சாதனைகள் எப்போதும் சாத்தியந்தான் (கிரண்பேடி) (2006)
3. வெள்ளிப்பனி மலையின்மீது (எம்.பி.வீரேந்திரகுமார்)(2009)

இலக்கிய வரலாறு (1)

1. தமிழ் இலக்கிய வரலாறு (2010)

ஆங்கில நூல் (1)

1. A Comparative Study of Bharati and Vallathol (1991)

அறக்கட்டளைப் பொழிவு நூல்கள் (3)

1. கம்பனில் மானுடம் (2002)
2. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை (2006)
3. பாரதிதாசனுக்குள் பாரதி (2011)

உரை நூல்கள் (3)

1. திருப்பாவை : உரை (1999)
2. திருக்குறள் : சிற்பி உரை (2001)
3. மார்கழிப்பாவை (2009) (திருப்பாவை,திருவெம்பாவை,திருப்பள்ளியெழுச்சி உரை)

தொகுப்பு நூல்கள்

1. நதிக்கரைச் சிறப்பங்கள் (2012)

பதிப்பித்த நூல்கள் (11)`

1. மகாகவி பாரதி சில மதிப்பீடுகள் (1982)
2. பாரதி – பாரதிதாசன் படைப்புக்கலை (1992)
3. தமிழ் உலா I & II (1993)
4. பாரதி என்றொரு மானுடன் (1997)
5. மருதவரை உலா (1998)
6. நாவரசு (1998)
7. அருட்பா அமுதம் (2001)
8. பாரதியார் கட்டுரைகள் (2002)
9. மண்ணில் தெரியுது வானம் (2006)
10. கொங்கு களஞ்சியம் (2006)
11. வளமார் கொங்கு (2010)

இதழாளர்

- வானம்பாடி (கவிதை இதழ்)
- அன்னம் விடு தூது (இலக்கிய மாத இதழ்)
- வள்ளுவம் (ஆசிரியர் குழு)
- கவிக்கோ (ஆசிரியர் குழு)
- கணையாழி (ஆசிரியர் குழு)

விருதுகள்

- மௌன மயக்கங்கள் – கவிதை நூல் – தமிழக அரசு விருது (1982)
- பாவேந்தர் விருது – தமிழக அரசு (1991)
- கபிலர் விருது – கவிஞர் கோ பட்டம் – குன்றக்குடி அடிகளார் (1992)
- A Comparative study of Bharati and Vallathol
- உ. சுப்பிரமணியனார் ஆங்கில நூல் பரிசு – தமிழ்ப் பல்கலைக்கழகம் (1994)
- இந்துஸ்தான் லீவர் Know your India போட்டி முதல் பரிசு (1970)
- பாஸ்கர சேதுபதி விருது – முருகாலயா – சென்னை (1995)
- தமிழ் நெறிச் செம்மல் விருது – நன்னெறிக் கழகம் கோவை (1996)
- திருப்பூர் தமிழ்ச் சங்க விருது – சிற்பியின் கவிதை வானம் நூலுக்கு – (1997)
- கம்பன் கலைமணி விருது – கம்பன் அறநிலை, கோவை (1998)
- சொல்கட்டுக் கவிஞர் விருது – திருவாரூர் இயல் தமிழ் பதிப்பகம் (1990)
- தமிழ்ப் புலமைக்கான சென்னை கொங்கு நண்பர்கள் சங்க விருது (1997)
- மூத்த எழுத்தாளருக்கான லில்லி தேவசிகாமணி விருது (1998)
- ராணா விருது – ஈரோடு இலக்கியப் பேரவை (1998)
- சிறந்த தமிழ்க் கவிஞர் விருது – கேரள பண்பாட்டு மையம் (1998)

- இருபதாம் நூற்றாண்டில் சிறந்த எழுத்தாளர் விருது – DIYA (1998)
- பாரதி இலக்கிய மாமணி விருது – அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் மன்றம், சென்னை (1998)
- ‘பூஜ்யங்களின் சங்கிலி’ – தமிழ்நாடு அரசு பரிசு (1998)
- ‘The Pride of Pollachi’ விருது – பொள்ளாச்சி காஸ்மோ பாலிடன் கிளப் (1999)
- ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் பிறந்த நாள் பரிசு - மதுரைத் தமிழிசைச் சங்கம் (2000)
- சாகித்ய அகாதமி மொழிபெயர்ப்பு விருது – 2000 (அக்கினி சாட்சி நாவலுக்கு – 2001)
- சாகித்ய அகாதமி படைப்பிலக்கிய விருது 2002 – (ஒருகிராமத்து நதி கவிதை நூலுக்கு – (2003)
- பாரதி விருது – தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் (2002)
- மகாகவி உள்ளூர் விருது – திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கம் (2003)
- பணியில் மாண்பு விருது – ரோட்டரி சங்கம் (வடக்கு) கோவை (2003)
- தலைசிறந்த பழைய மாணவர் விருது- ஜமால் முகமது கல்லூரி (2003)
- பாரதி பாவாணர் விருது – மகாகவி பாரதி அறக்கட்டளை கோயம்புத்தூர் (2004)
- பாராட்டு விருது – அரிமா மாவட்டம் 324 / 01 வட்டார மாநாடு, கோயம்புத்தூர் (2004)
- தமிழ் வாகைச் செம்மல் விருது – சேலம் தமிழ்ச் சங்கம் (2005)
- ராஜா சர் முத்தையா விருது (2009)
- கவிக்கோ அப்துல்ரகுமான் விருது (2006)

- அரிமா சங்கம் பொள்ளாச்சி, பிரம்மகுரு விருது (2007)
- ரோட்டரி சங்கம் பொள்ளாச்சி [No Paragraph Style]For the Sake of Honour Award (2008)
- வெற்றித் தமிழர் பேரவை விருது (2008)
- தமிழ்நாடு அரசு கலைமாமணி விருது (2009)
- 'நல்லி' திசை எட்டும் மொழியாக்க விருது (2010)
- ச.மெய்யப்பன் அறக்கட்டளை – தமிழறிஞர் விருது (2010)
- பாரதிய வித்யாபவன் கோவை, தமிழ்மாமணி விருது (2010)
- கம்பன் கழகம் சென்னை எம்.எம்.இஸ்மாயில் விருது (2010)
- பப்பாசி கலைஞர் பொற்கிழி விருது (2012)
- பத்மஸ்ரீ விருது (2022)[2]

கவிஞர் சிற்பியைக் குறித்து வெளிவந்துள்ள படைப்புகள்..

- சிற்பியின் படைப்புக்கலை – முனைவர் தே.ஞானசேகரன் (ப.ஆ.) (1993)
- கோபுரத்தில் ஒரு குயில் – சி.ஆர்.ரவீந்திரன் (1996)
- சிற்பி – மரபும் புதுமையும் – முனைவர் தே.ஞானசேகரன்(ப.ஆ.) (1996)
- கவிஞர் சிற்பி -கருத்தியல்வளம் – முனைவர் இரா.சந்திரசேகரன் (ப.ஆ.) (2003)
- கவிஞர் சிற்பி – கவிதைவளம் – முனைவர் இரா.சந்திரசேகரன் (ப.ஆ.) (2003)
- கவிஞர் சிற்பி – கவிதைக்குள் ஒரு பிரபஞ்சம் – முனைவர் இரா.சந்திரசேகரன் (2004)

- சிற்பியின் படைப்புலகம் – பேராசிரியர்கள் மா.நடராசன், மதியழகன் (ப.ஆ.) (2004)
- சிற்பியின் கவிதையில் சிறைப்பட்ட சீர்திருத்தக் கவிஞர் – அ.சங்கரவள்ளி நாயகம் (2006)
- சிற்பி துளிகளில் ஒளிரும் வெளிகள் – சொ.சேதுபதி (2011)
- சிற்பி – மௌனம் உடையும் ஒரு மகாகவிதை – நவபாரதி (2011)
- ஆழிக்கவிதைகளும், ஆழியாற்றுக்கவிதைகளும் – உ.அலிபாவா (ப.ஆ) (2012)
- Sirpi Poet as Sculptor – P.Marudanayagam (2006)
- A noon in Summer (1996)
- Sirpi Poems – A Journey (2009)

ஆய்வுத் திட்டங்கள் UGC – பெருந்திட்டங்கள்


- தமிழ் இலக்கியத்தில் விடுதலை இயக்கத் தாக்கம் (1989 – 1991)
- இடைக்காலக் கொங்கு நாட்டின் சமூக – பொருளாதார அமைப்புகள் (1993- – 1997)
- கொங்கு களஞ்சியம் – இரு தொகுதிகளின் பதிப்பாசிரியர்

மதிப்புறு பொறுப்புகள்

- காந்திகிராம் பல்கலைக்கழகம், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம், துணைவேந்தர் தேர்வுக்குழு உறுப்பினர்.
- சாகித்ய அகாதமி செயற்குழு உறுப்பினர் / ஒருங்கிணைப்பாளர் தமிழ் ஆலோசனைக் குழு (2008)
- சாகித்ய அகாதமி பொதுக்குழு / தமிழ் ஆலோசனைக் குழு உறுப்பினர் (1993 – 1998)


- எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழகம் தமிழ்ப்பேராயம் செயற்குழு, விருதுக்குழு உறுப்பினர்.
- தலைவர், இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் (2000 – 2005)
- தலைவர், ஞாலத் தமிழ்ப் பண்பாட்டு மன்றம் (2009)
- தலைவர், கவிஞர் சிற்பி அறக்கட்டளை
- தலைவர், பி.எம்.எஸ்., அறக்கட்டளை
- செயலர், பொள்ளாச்சி இலக்கியக் கழகம்
- உறுப்பினர், பாரதிய வித்யா பவன் நிர்வாகக் குழு, கோவை
- உறுப்பினர், டாக்டர் NGP கல்லூரிக் குழு, கோவை
- முன்னாள் உறுப்பினர், Afirm cancan either eitherraiseraise Money Moneyusing Equity,Equity, Equity,or using Debt DebtRKR கல்வியியல் கல்லூரிக் குழு, உடுமலைப் பேட்டை
- தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் ஆசிரியர் தேர்வுக்குழு, பாடத்திட்டக்குழு முன்னாள் உறுப்பினர்
- பல்கலைக்கழக மானியக்குழு, மத்திய அரசு பண்பாட்டுத்துறை, மத்திய அலுவலர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசு செயலர் தேர்வாணையத் தேர்வுக்குழு முன்னாள் உறுப்பினர்
- உறுப்பினர், நிர்வாகக்குழு, பாரதியவித்யா பவன், கோவை
- சென்னை, அண்ணாமலை, பாரதியார், பாரதிதாசன், கொல்கத்தா, அழகப்பா, மதுரை, கேரளப் பல்கலைக் கழகங்களிலும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திலும் அறக்கட்டளை உரையாளர்
- பப்பாசி, புதியதலைமுறை, இளையராஜா அமைத்த பாவலர் வரதராஜன் நினைவு விருதுக்கான தேர்வுக்குழு உறுப்பினர்.










விருதுகள்
தமிழக அரசின் பாவேந்தர் விருது, குன்றக்குடி ஆதீனம் கபிலர் விருது, திருவனந்தபுரம் தமிழ்ச் சங்க மகாகவி உள்ளூர் விருது, மூத்த எழுத்தாளருக்கான லில்லி தேவசிகாமணி விருது
பாஸ்கர சேதுபதி விருது
கவிஞர்கோ குன்றக் அடிகளார் வழங்கியது
தமிழ் நெறிச் செம்மல் விருது
ராணா விருது
சொல்கட்டுக் கவிஞர் விருது
பாரதி இலக்கிய மாமணி விருது
கவிக்கோ அப்துல் ரகுமான் விருது
www.facebook.com/tnpscwinners
www.tnpscwinners.com



தமிழ் இலக்கிய வரலாறு
முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்
முனைவர் சொ. சேதுபதி



சிற்பி பால சுப்பிரமணியன்


திருக்குறள்
உரையாசிரியர்:
சிற்பி பாலசுப்பிரமணியம்



தமிழ் இலக்கிய வரலாறு
முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்
முனைவர் சொ. சேதுபதி



மார்கழிப்பாவை


ஒரு கிராமத்து நதி
சிற்பி











கவிஞர் சிற்பி

https://kavithai.fandom.com/ta/wiki/%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%9E%E0%AE%B0%E0%AF%8D_%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AF%8D%E0%AE%AA%E0%AE%BF

நிலவுப் பூவின் இதழ்களில்

முனைவர். ம . இராசேந்திரன்

மேனாள் துணைவேந்தர்,தமிழ்ப்பல்கலைக்கழகம்,தஞ்சாவூர்.

கவிஞர் சிற்பியின் நிலவுப் பூ **1963** இல் வெளிவந்திருக்கிறது. பேராசிரியர் இ.மறைமலை அவர்கள் இப்போது திறனாய்வு எழுதியிருக்கிறாரே! இதற்கான தேவை என்ன? படிக்கத் தொடங்கினேன்.

கவிஞர் சிற்பி இப்போது நாடறிந்த கவிஞர்; இரண்டு சாகித்ய அகதாமி விருதுகளை வாங்கியிருக்கிறார்; ஆளுமையும் செல்வாக்கும் கொண்டவர்.

எழுதிய பேராசிரியரும் தமிழுலகம் அறிந்தவர். இதன்வழியாகப் புதிதாக எதையும் சேர்த்துக்கொள்ளும் தேவை இல்லாதவர்.

எனவே கவிஞர் சிற்பி அவர்களுக்கோ, பேராசிரியருக்கோ புதிய ஒளிவட்டங்களை உருவாக்கும் நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.. ஆனாலும் இப்படி ஒரு நூல் உருவாகி இருக்கிறது.

நிலவுப் பூவின் திறனாய்வுக்குத் தேவை இருக்கிறது.

சிற்பி பாலசுப்பிரமணியம் கவிஞர் சிற்பியாகக் கூடு உடைத்து வெளிப்பட்ட பயிற்சியும் முயற்சியும் பார்க்கப்பட வேண்டியவை.அதற்கு அவரது நிலவுப் பூவில் கண்பதிக்க வேண்டியிருக்கிறது.

ஏனெனில் கவிஞர் சிற்பியின் முதல் தொகுதி நிலவுப் பூ.

முதல் தொகுதி முதன்முதல் வந்தத் தொகுதி என்பதாக மட்டுமின்றிப் பின் வந்த அவரது படைப்புகளுக்கான "முதல்" இருக்கும் தொகுதியாகவும் இருக்கிறது.

கவிஞர் சிற்பி எனும் ஆலமரத்தின் விழுதுவெளிச்சத்தில் வேர்களைக் காட்டுகிறார். வேர்களைப் பிழிந்து விதை எடுக்கிறார்.விதையைக் கூறிட்டுக் கவிதையின் உயிர்ப் புள்ளிகளைப் பட்டியலிடுகிறார்.

நிலவைக் காட்டிக் கதை சொல்லி உணவு ஊட்டும் தாய்போல, பேராசிரியர் நிலவுப் பூவைக் காட்டி நிறையச் சொல்லியிருக்கிறார்.

சொல்லும் கதையில் கதை சொல்லும் தாயின் கற்பனை, அறிவு, ,அனுபவம் வெளிப்படும்.

இந்நூலில் பேராசிரியரின் புலமையும் படிப்பனுபவமும் வெளிப்படுகின்றன.

நிலவுப் பூவை, இதழ் இதழாகப் பார்த்து, அவற்றின் வண்ணங்களில் தென்படும் வானவில் அழகைக் காட்டுகிறார்; ஒளிமழையில் உள்ளடங்கிக் கிடக்கும்

சங்கப் புலவர்கள்,

தேவார மூவர்,

மாணிக்கவாசகர்,

ஆண்டாள்,

கம்பர்,

சேக்கிழார்,

பாரதியார்,

பாரதிதாசன்,

திரு.வி.க. போன்றோரின் படைப்புகளின் வெளிச்சப் புள்ளிகளையும் எடுத்துக் காட்டுகிறார்.

கவிஞர் சிற்பியின் கலை நுணுக்கப் பார்வை,

அழகியலின் மென்மை,

காதல் உணர்வின் மேன்மை,

சமுதாய அக்கறையின் நேர்மை ஆகியவற்றைக் காட்டுகிறார். படைப்பைப் புரிந்துகொள்ளத் தேவைப்படும் படிப்பவரின் தகுதிகளையும் இந்நூல் உணர்த்துகிறது.

'நிலவுப் பூ' எப்போதும் இருக்கும்..தேய்வதற்கும் வளர்வதற்கும் தெரியாமல் போவதற்கும் நிலவு காரணம் இல்லை.

பகலுக்கும் இரவுக்கும் கதிரவன் காரணமாவதில்லை;சுழலும் பூமி கதிரவனைப் பார்க்கிற பொழுது பகல்; முகம் திருப்பிக் கொள்கிறபோது இரவு.

இருக்கிற இடம், பார்க்கிற கோணத்தைத் தீர்மானிக்கிறது. .

இடம் மாறுகிறபோது கோணம் மாறுகிறது; கோணம் மாறுகிறபோது காட்சி மாறுகிறது.

நிலவுப் பூவைப் பேராசிரியர் இ.மறைமலை அவர்கள் தமிழ்மண்ணில் நின்று பண்பாட்டு மரபுக் கோணத்தில் பார்த்திருக்கிறார். பாராட்டிப் பதிவு செய்திருக்கிறார்.

பார்க்கப் பார்க்க நிலவுப் பூ இதழ்களில் புதுப்புது வெளிச்சம் தெரிகிறது.

அன்புடன்

ம.ரா.

காணொளிகள்

01] Vanakkam Tamizha with Poet Sirpi Balasubramaniam
https://www.youtube.com/watch?v=8pZTSgF4CLY [37:12]

02] **தமிழ்மொழி புதிய எல்லைகளை தொடவேண்டும்! - பத்மஸ்ரீ கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்**
https://www.youtube.com/watch?v=PSLRBB7tfGo [16:29]

03] **புதுக் கவிதை :சிற்பி பாலசுப்பிரமணியம் தொடர்பான செய்திகள்.**
https://www.youtube.com/watch?v=_2YcOr_mzvg [1:28:59]

04] **சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு பாராட்டுவிழா**
https://www.youtube.com/watch?v=ZZmzedWnQmY [36:31]

05] **சிற்பி உடன் ஓர் கலந்துரையாடல்**
https://www.youtube.com/watch?v=XYLSAm8u9Zg [1:07:01]

06] **உலக இலக்கிய உரையாடல் : இன்றைய கவிதை உலகம் | கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்**
https://www.youtube.com/watch?v=FgYGyIZDuF8 [2:05:50]

தலைப்பு: இன்றைய கவிதை உலகம்

சிறப்புரை: கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்

நாள்: நேரலை - 28 ஜூலை 2020

கலந்துரையாடல்:

கவிஞர் சிற்பி அவர்களுடன் இணைந்து , இன்றைய கவிதை உலகம் குறித்து ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், பிரான்ஸ், கனடா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த ஐவரின் கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஜூம் இணையவழியே (நேரலையாக படைப்பு டிவி யூட்யூப் வழியாகவும்) 28 ஜூலை 2020 காலை 11 மணிக்கு படைப்பு குழுமம் நடத்த இருக்கிறது.

உலக இலக்கியத்தில் இன்றைய கவிதை உலகம் குறித்து அரிய தகவல்களை தெரிந்து/பகிர்ந்து கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

தனது 85வது பிறந்தநாள் கொண்டாட இருக்கும் கவிஞர் சிற்பி அவர்களுக்கும் அவரது நீண்ட இலக்கிய பயணத்திற்கும் பார்வையாளார்களாக பூங்கொத்துகளைப் பரிசளிப்போம்

07] **ஒரு கிராமத்து நதி சிற்பி**

https://www.youtube.com/watch?v=oPxxqsJK-3Q [17:22]

சிற்பி பாலசுப்பிரமணியன் அவர்கள் இயற்றிய ஒரு சிறந்த கவிதை ஒரு கிராமத்து நதி என்ற தலைப்பில் ஆனது கிராமத்து வாழ்க்கையின. இயல்பையும் அந்த கிராமத்தை ஒட்டி ஓடக்கூடிய நதியின் மீதான காதலையும் இந்த கவிதையில் பதிவு செய்துள்ளார் சிற்பி பாலசுப்பிரமணியன்

08] "**க.நா.சு ஒரு கவிஞர்" - உரை: சிற்பி பாலசுப்பிரமணியம்**

https://www.youtube.com/watch?v=HYJFfPPt8NU [44:15]

(😊)(😊) சிற்பி பாலசுப்பிரமணியம் (😊)(😊)

